30 AUG 2010
சேப்பாக்கம், சென்னை-5

சுருக்கம்

உறுதியாக்கம்– கோயம்புத்தூர் மாநகராட்சி– கண்காணிப்பாளர்/உதவி வருவாய் அலுவலர் நிலைப் பணியாளர்கள் நிர்வாக அலுவலர் மற்றும் கணக்கு அலுவலர் பணியிடங்களுக்கு பதவி உயர்வு அளிக்கப்பட்டது அரசின் உறுதியாக்கம்– ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (மா.ந.4) துறை

அரசு ஆணை (இருபதாண்டு) எண். 68 நாள் : 27–08–2010

திருவள்ளுவராண்டு 2040, ஆவணி 11–ம் நாள்

படிக்கவும்:

1. ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி ந.க.எண்.3678/2009/ எம்சி2, நாள் 27–02–09, 24–04–2009 மற்றும் 07–12–09
2. நகராட்சி நிர்வாக இயக்குநர் ந.க.எண்.38453/2009 /மாந1 நாள் 02–02–2010
3. நகராட்சி நிர்வாக இயக்குநர் ந.க.எண்.38453/2009/ மாந1 நாள் 24–03–2010

ஆணை:-

கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் செயல்முறைகள் எண்.14248/08/எம்சி2 நாள் 06–12–2008–ல் வெளியிடப்பட்ட கண்காணிப்பாளர்/உதவி வருவாய் அலுவலர் பணிமூப்பு பட்டியலில் இருந்து அரசாணை எண்.368, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள் 18–10–1993–ன்படி, தகுதி பெற்ற, 7 (ஏழு) கண்காணிப்பாளர்/உதவி வருவாய் அலுவலர்களின் தேர்ந்த பட்டியலுக்கு மாமன்றம் தனது 29–01–2009 நாளிட்ட தீர்மானத்தில் (தீர்மானம் எண்.338), ஒப்புதல் வழங்கி தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. மேற்படி தீர்மானத்தின் அடிப்படையில் திருமதி என்.ஞானசவுந்தரி மற்றும் திருமதி ஆர்.பொன்னம்மாள் ஆகிய இருவரையும் அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு கணக்கு அலுவலராகவும், திருவாளர்கள் எம்.பொன்முடி, எல்.ஜெயச்சந்திரன், ஏ.லோகநாதன் மற்றும் எம்.துரைராஜ் ஆகியோரை அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு நிர்வாக அலுவலர்களாகவும் பதவி உயர்வு அளித்து தனது செயல்முறைகள் எண்.14249/2008/எம்சி2 நாள் 04–02–2009–ல் கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் ஆணையிட்டுள்ளார். அதன்படி மேற்படி தனியர்கள் பதவி உயர்வு வழங்கப்பட்ட பணியிடங்களில் 05–02–2009 முற்பகல் முதல் பொறுப்பேற்று பணியாற்றி வருகின்றனர் என கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் முதலாவதாக படிக்கப்பட்ட தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

2. கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் அக்கடிதத்தில் பதவி உயர்வு பெற்ற தனியர்கள் கணக்கர் நிலையிலுள்ள உதவியாளர் பணியிடங்களில் பல வருடங்களுக்கு மேலாக பணியாற்றியுள்ளனர் எனவும், இவர்கள் அனைவரும் 30 ஆண்டுகளுக்கு மேலாக அம்மாநகராட்சியில் பல நிலைகளில் பணிபுரிந்துள்ளனர் எனவும் தெரிவித்து, இவர்கள் நீண்ட கால பணியினை கருத்தில் கொண்டு, பணியமைப்பு விதி–4ஐ தளர்வு செய்து கணக்கு அலுவலர் மற்றும் நிர்வாக அலுவலராக நியமனம் செய்ததை அங்கீகரித்து உறுதியாக்கம் அளிக்குமாறு கோரியுள்ளார்.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர் மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட தனது கடிதத்தில் பதவி உயர்வு பெற்ற 6 (ஆறு) நபர்களும் அப்போதிருந்த பணி விதிகளின்படி, கணக்கராகவோ அல்லது கணக்குப் பிரிவில் கண்காணிப்பாளராகவோ பணி புரியவில்லை எனவும், மேற்படி 6 நபர்களும்

த.பி.பா.,

பதவி உயர்விற்கான தகுதியை பெற்றிருக்கவில்லை என்றும், இவர்கள் கணக்கர் நிலையிலுள்ள உதவியாளர் பணியிடங்களில் பல வருடங்களுக்கு மேலாக பணிபுரிந்துள்ளதால், இவர்களது நீண்ட கால பணியினை கருத்தில் கொண்டு, பணியமைப்பு விதி 4—ஐ தளர்வு செய்து கணக்கு அலுவலர்கள் / நிர்வாக அலுவலர்களாக பதவி உயர்வு செய்ததை அங்கீகரித்து உறுதியாக்கம் அளிக்கும்படி கோரியுள்ளார்.

4. நகராட்சி நிர்வாக இயக்குநரின் பரிந்துரை பரிசீலிக்கப்பட்டு, அதனை ஏற்று கீழ்க்கண்டுள்ள 6 பணியாளர்களின் பொருட்டு அவர்களுக்கு எதிரே கலம் எண்.4—ல் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளை அவர்கள் சார்பாக தளர்த்தி, அவர்கள் பதவி உயர்வுக்கு, அவர்கள் பதவி உயர்வு பெற்ற பணியிடத்தில் பொறுப்பேற்றுக் கொண்ட நாள்முதல் உறுதியாக்கம் வழங்கி அரசு ஆணையிடுகிறது:-

| வ. எண். | பணியாளர் பெயர் மற்றும் பதவி | பதவி உயர்வு பெற்ற பணியிடம் | பணியாளர் பொருட்டு 1998ஆம் வருடத்திய தமிழ்நாடு மாநகராட்சிகள் பொதுப் பணி விதிகளில் தளர்த்தப்படும் விதி எண். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | திருமதி என்.ஞானசவுந்தரி, உதவி வருவாய் அலுவலர்/ கண்காணிப்பாளர் | கணக்கு அலுவலர் | விதி 4 |
| 2 | திருமதி ஆர். பொன்னம்மாள், உதவி வருவாய் அலுவலர்/ கண்காணிப்பாளர் | கணக்கு அலுவலர் | விதி 4 |
| 3 | திரு எம்.பொன்முடி, உதவி வருவாய் அலுவலர்/ கண்காணிப்பாளர் | நிர்வாக அலுவலர் | விதி 3 மற்றும் 4 |
| 4 | திரு எல்.ஜெயசந்திரன், கண்காணிப்பாளர் | நிர்வாக அலுவலர் | விதி 3 மற்றும் 4 |
| 5 | திரு ஏ.லோகநாதன், உதவி வருவாய் அலுவலர் | நிர்வாக அலுவலர் | விதி 3 மற்றும் 4 |
| 6 | திரு எம்.துரைராஜ், கண்காணிப்பாளர் | நிர்வாக அலுவலர் | விதி 3 மற்றும் 4 |

(ஆளுநரின் ஆணைப்படி)

க. அஷோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி, கோயம்புத்தூர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை—5
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, குறளகம், சென்னை—108

நகல்
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை—9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை முதன்மைச் செயலரின் தனிச் செயலர், சென்னை—9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (அந2) துறை, சென்னை—9
இருப்புக் கோப்பு / உதிரி

ஆணைப்படி / அனுப்பப்படுகிறது

பிரிவு அலுவலர்